## மீனவர்களின் வருமானத்தை உயர்த்தவும்

# மீன்வளத்தை பெருக்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 7-

நாட்டில் மீன்வளத்தை உறுதி செய்யவும், மீனவர்களின் வருமானத்தை மேம்படுத்தவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக அவரது கேள்விகள் வருமாறு:

உணவுப் பாதுகாப்பு, ஏற்றுமதி மற்றும் வேலை வாய்ப்பில் மீன்வளத்துறை குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்த போதிலும், கடல் மீன் இருப்பு குறைதல், அளவுக்கு அதிகமான மீன்பிடிப்பு, பருவநிலை மாற்றம், வாழ்விடச் சீரழிவு, கடல் மாசுபாடு, அழிவை ஏற்படுத்தும் மீன்பிடி முறைகள், அதிகரிக்கும் செயல்பாட்டுச் செலவுகள் மற்றும் பாரம்பரிய மீனவ சமூகங்களிடையே வாழ்வாதாரப் பாதுகாப்பின்மை ஆகியவற்றால் நாட்டின் மீன்வளத் துறை வளர்ந்து வரும் சவால்களை எதிர்கொள்கிறது என்பது குறித்த அறிக்கைகளை அரசு கவனத்தில் கொண்டுள்ளதா?

தற்போதைய சூழலுக்குக் காரணமான முக்கிய காரணிகள் குறித்த ஒன்றிய அரசின் மதிப்பீடு என்ன?

அறிவியல் பூர்வமான மீன்வள மேலாண்மை, மீன் இருப்பு மதிப்பீடு, வாழ்விட மறுசீரமைப்பு, கடல் பாதுகாப்பு மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் ஆகியவற்றை வலுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

பருவநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய உள்கட்டமைப்பு, காப்பீடு, மாற்று வாழ்வாதாரங்கள், நவீன மீன்பிடித் தொழில் நுட்பங்கள் மற்றும் மதிப்புச் சங்கிலி மேம்பாடு ஆகியவற்றின் மூலம் சிறு அளவிலான மீனவர்களுக்கு கூடுதல் ஆதரவை வழங்க அரசு முன்மொழிந்துள்ளதா;

அவ்வாறாயின், அடுத்த ஐந்து ஆண்டுகளில் நிலையான மீன்வளத்தை உறுதி செய்யவும், மீனவர்களின் வருமானத்தை மேம்படுத்தவும் அரசு நிர்ணயித்துள்ள இலக்கு என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் என்கிற லலன் சிங் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

ICAR மத்திய கடல்சார் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (ICAR CMFRI) வெளியிட்ட 'இந்தியாவின் கடல் மீன் இருப்பு நிலை (2022)' அறிக்கையின்படி, இந்தியக் கடல் பகுதிகளில் மீன் இருப்பு நல்ல நிலையில் உள்ளது; இந்திய பிரத்யேக பொருளாதார மண்டலத்தின் (EEZ) பல்வேறு பகுதிகளில் மதிப்பிடப்பட்ட 135 மீன் இருப்பு வகைகளில்



91.1% நிலையான அளவுகளில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ICAR CMFRIஇன் புள்ளிவிவர ரீதியாக சரிபார்க்கப்பட்ட அறிவியல் மாதிரித் திட்டத்தின் அடிப்படையிலும், சராசரி ஆண்டு வளர்ச்சிப் போக்குகளின் அடிப்படையிலும் 20142023 காலகட்டத்திற்கான இந்தியாவின் கடல் மீன் பிடிப்பு விவரங்களை ஆய்வு செய்ததில், கடல் மீன் உற்பத்தியில் தொடர்ச்சியான சரிவுக்கான எந்த ஆதாரமும் இல்லை; மாறாக, ஒட்டுமொத்தமாக நிலையான போக்குடன் கூடிய சிறிய அளவிலான அதிகரிப்பு காணப்படுகிறது.

மேலும், ICAR CMFRI தனது ஆராய்ச்சி மையங்கள் மற்றும் கடலோர மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் உள்ள களநிலையங்கள் மூலம் மீன்பிடிப்பு விவரங்களைத் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும், வணிக ரீதியாகவும் சூழலியல் ரீதியாகவும் முக்கியமான மீன் வளங்களின் உயிரியல் செயல்பாடுகள் குறித்துக் கவனம் செலுத்தி ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் ICAR தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனம் நிகழ்நேரக் (realtime) கணக்கெடுப்புகள் மூலம் கடலோரச் சூழல் மண்டலத்தின் ஆரோக்கியத்தையும் கண்காணிக்கிறது. இதே போன்று, இந்திய மீன்வளக் கணக்கெடுப்பு நிறுவனம் (FSI), இந்தியாவின் பிரத்யேகப் பொருளாதார மண்டலத்தில் (EEZ) முறையான ஆய்வுக் கணக்கெடுப்புகளை மேற்கொண்டு கடல்சார் மீன்வள வளங்களின் நிலையை கண்காணிக்கிறது. மீன்பிடி அழுத்தம், காலநிலை மாறுபாடு, கடல் மாசுபாடு மற்றும் வாழ்விடச் சீரழிவு ஆகியவற்றால் ஏற்படும் தாக்கங்களை மதிப்பிடுவதற்குத் தேவையான, கடலடி மற்றும் ஆழ்கடல் மீன் இனங்களின் பரவல், எண்ணிக்கை மற்றும் உயிரியல் பண்புகள் குறித்த அடிப்படைத் தரவுகளை இந்நிறுவனம் உருவாக்குகிறது.

ஒன்றிய அரசின் மீன்வளத் துறை, அறிவியல் பூர்வமான மீன்வள மேலாண்மை, கடல்சார் பாதுகாப்பு மற்றும் சிறு அளவிலான மீனவர்களின் நலன் ஆகியவற்றை வலுப்படுத்த விரிவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 2015ஆம் ஆண்டு முதல், 'நீலப் புரட்சித் திட்டம்' (Blue Revolution Scheme), 'மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி' (FIDF), 'பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா' (PMMSY) மற்றும் 'பிரதான் மத்ஸ்ய கிசான் சம்ரித்தி சஹ் யோஜனா' (PM MKSSY) போன்ற முக்கியத் திட்டங்கள் மூலம் 39,272 கோடி நிதியை ஒதுக்கி, இத்துறையில் முதலீட்டை அரசு கணிசமாக அதிகரித்துள்ளது.

PMMSY திட்டத்தின் கீழ், மீன் இருப்புகளைப் புத்துயிர் பெறச் செய்வதற்கும் கடல்சார் வாழ்விடங்களை மீட்டெடுப்பதற்கும் இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகள் செயல்படுத்தப்படுகின்றன. இதில் விரிவான கடல் பண்ணைத் திட்டங்கள், செயற்கைப் பவளப்பாறைகளை நிறுவுதல், மற்றும் கடல் ஆமைகளைப் பாதுகாப்பதற்காக இழுவலைகளில் ஆமை விலக்கும் கருவிகளை (TEDs) பொருத்துதல் ஆகியவை அடங்கும். நீடித்த மீன்வளத்தை உறுதி செய்வதற்கும், சிறு மீனவர்கள் தங்கள் வருமானத்தை கணிசமாக அதிகரிக்க உதவுவதற்கும், துறையின் திட்டங்கள் வாழ்வாதாரப் பன்முகப்படுத்தலுக்கும், அளவுக்கு அதிகமாகச் சுரண்டப்படும் கடலோர நீர்நிலைகளில் மீன்பிடி அழுத்தத்தைக் குறைப்பதற்கும் முன்னுரிமை அளிக்கின்றன.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

---

## கரூர் மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

கரூர்.ஆக.7.

மக்கள் நல ஆட்சிக்கு புதிய பரிமாணத்தை உருவாக்கிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவுநாளைமுன்னிட்டு, ஆகஸ்ட் 7ஆம் தேதி கரூர் மாவட்டம் முழுவதும் நினைவு நாள் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. கூறியிருப்பதாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழர் வரலாற்றில் என்றும் அழியாத இடத்தைப் பெற்ற மாமனிதர். அவரது அரசியல் வாழ்வும், இலக்கியப் பங்களிப்



பும், சமூகநீதிக்கான இடையறாத போராட்டங்களும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக ஆற்றிய அரும் பணிகளும் தலைமுறைகள் கடந்தும் வழிகாட்டும் கலங்கரை விளக்க மாகத் திகழ்கின்றன. கல்வி, சமூகநீதி, இடஒதுக்கீடு, பெண்கள் முன்னேற்றம், விவசாயி கள் நலன், தொழிலாளர் உரிமைகள், உள்ளாட்சி அமைப்புகளின் வலிமை, தமிழ்மொழி வளர்ச்சி, தமிழர் பண்பாட்டு பெருமை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் வரலாற்றுச் சாதனைகளைப் படைத்து தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்ற தமிழினத் தலைவர் கலைஞர். அவர்கள் உருவாக்கிய மக்கள் நலத் திட்டங்களும், சட்டங்களும், கொள்கைகளும் இன்றளவும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான உறுதியான அடித்தளமாக விளங்கி வருகின்றன.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு சட்ட மன்ற உறுப்பினர்கள் மாவட்ட மாநில மாவட்ட மாநகர, நகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் மற்றும் அனைத்து அணிகளும் தங்களது பகுதிகளில் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்துதல், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், அன்னதானம். மாணவ -மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல் உள்ளிட்ட மக்கள் நலப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். மேலும், கலைஞர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்திய சமூகநீதி, சுயமரியாதை, சமத்துவம், மதச்சார்பின்மை, மொழி உரிமை ஆகிய உயரிய கொள்கைகளை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் நிகழ்ச்சிகளும் நடத்திட கேட்டுக் கொள்கிறேன்.

ஆகையால், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் வார்டு. கிளை கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், தொண்டர்கள் அனைவரும் தங்களது பகுதிகளில் பெருந்திரளாகப் பங்கேற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை மக்கள் நலப் பணிகளுடன் எழுச்சியோடு அனுசரிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

## முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு

# கோவை வடக்கு மாவட்டத்தில் அனைத்து கிளைகளிலும் அஞ்சலி செலுத்துவீர்!

## மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வேண்டுகோள்!

கோவை, ஆக. 7-

கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

மறைந்தும், மறையாமல், இன்றைக்கும் தமிழக மக்களின் இதயங்களில் நிறைந்திருக்கும் - நம்முடைய உலக தமிழினத்தின் ஒப்பாரும் - மிக்காரும் இல்லா தனிப்பெரும் தலைவர், பல இந்திய பிரதமர்களையும், ஜனாதிபதிகளையும் உருவாக்கி, இந்திய அரசியல் வரலாற்றில் நீங்கா இடம் பெற்ற பிதாமகன், தமிழ்நாட்டிற்கும் தமிழர்களுக்கும் அவர் செய்த



அரும்பெரும் சாதனைகள் இன்றைக்கும் தமிழக வரலாற்றில் அழியாத இடத்தைப் பெற்றுள்ளது. தமிழக முதல்வராக 5 முறை பணியாற்றிய அனைத்து துறைகளிலும் அளப்பரிய சாதனைகளை படைத்து தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் சென்ற மகத்தான முதல்வர் கலைஞர் அவர்கள் நிறை வேற்றிய மக்கள் நலத்திட்டங்களும், சட்டங்களும் தான் இன்றைக்கும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான உறுதியானஅடித்தளமாக விளங்குகிறது.

அத்தகைய சரித்திர சாதனைகளை படைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளான இன்று கோவை வடக்கு மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் உள்ள அனைத்து கிளைகளிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்தை அலங்கரித்து வைத்து மலர் மாலை அணிவித்து அந்தந்த கிளைகளில் உள்ள கழகத்தினர் அனைவரும் திரண்டு வந்து அவரது படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.


இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



தஞ்சையில் நடைபெற்ற விவசாயிகளுக்கு ஆதரவான கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – தமிழ்நாடு எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசாத வார்த்தையை பேசியதாக சொல்லி பொய்யான குற்றச்சாட்டு சுமத்தி கைது செய்த த.வெ.க அரசை கண்டித்து, உடனே விடுதலை செய்ய வலியுறுத்தியும், கும்பகோணத்தில் தி.மு.க சார்பில் சாலை மறியல் நடைபெற்றது. இதில் கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.கே.முத்துச்செல்வன், ஜெ.சுதாகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் 250க்கு ம்மேற்பட்டோர் பங்கேற்றனர்.

---

# தலைவா! உன் புகழ் வாழ்க!



தந்தை பெரியாரும்
சிந்தைநிறை அண்ணாவும்
விந்தையென ஓருருவாய்
வந்தஎங்கள் மன்னவனே!

"வீழ்வதுநாம் என்றாலும்
வாழ்வதுநம் தமிழ்"என்றே
ஆழ்மனத்தி லே,பதிய
அனைவருக்கும் சொன்னவனே!

அகரச்செந் தமிழுக்கோர்
அரணாக வாய்த்தவனே!
சிகரத்தின் உயரத்தில்
செம்மொழியை வைத்தவனே!

இன்னலுற்று வெஞ்சிறையில்
வெந்தவனே! எந்தமிழர்
முன்னேறப் படிக்கட்டாய்
முதுகெலும்பைத் தந்தவனே!

அடல்மறவர், யாருக்கும்
அஞ்சாத தமிழர்என
உடன்பிறப்புப் பெரும்படையை
உருவாக்கி வென்றவனே!

தென்புலத்தை மீட்கவந்த
தீரர்களை, வீரர்களை
அன்பு முகம்காட்டி
அரவணைத்துச் சென்றவனே!

மொட்டவிழ்ந்த மலர்த்தேனாய்
முப்பால் குடித்தவனே!
கட்டறுத்துப் பகைவெல்லக்
கணைகள் விடுத்தவனே!

கொட்டடியிற் சிறைப்பட்டும்
கொஞ்சுதமிழ் அன்னைக்கு
மட்டற்ற எழுச்சிப்பா
மாலை தொடுத்தவனே!

வேலின் நுனிக்கூர்மை
வில்லம்பின் போர்ப்பாய்ச்சல்!
நூலின் மதிநுட்பம்!
நுண்ணோக்கும் தொலைப்பார்வை!

ஆலின் விழுதாகி
அடிமரத்தைத் தாங்கிநிற்க,
"ஸ்டாலின்" எனும்எங்கள்
"தளபதி"யைக் கொடுத்தவனே!

ஊளையிடும் நரிக்குலத்தை
உன்பேரன் "உதயநிதி"
வாள்சுழற்றிக் களமாடும்
வளவன்அந்தச் சோழன்போல்

தூள்படுத்தும் காட்சியிலே
தொண்டர் பெருங்கூட்டம்
தோள்சிலிர்க்கும் எழுச்சி!உன்றன்
தொடர்ச்சி!கொள்கை நீட்சியன்றோ!

மறையுமோ அழகுமுகம்?
மறக்குமோ ஆசைமுகம்?
உறங்கினால் கனவிலும்
உனதுமுகம்! எம்தலைவா!

நினைவுநாள் உனக்கில்லை!
நேற்று,இன்று, நாளைஉன்னை
நினையாத நாள்ஒன்று
நிச்சயமாய் எமக்கில்லை!

வாராது போல்வந்த
மாமணிநின் திருவடியை
ஈரக் கடலலைகள்
எப்போதும் வணங்கிஎழும்!

கோள்களும்உன் பெயர்போற்றிக்
கொண்டாடும்! நாட்காட்டித்
தாள்களும்உன் பொதுவாழ்வுச்
சாதனையைக் கவிபாடும்!

மூப்பிலும்நீ தமிழ்நாட்டை
முழுவதுமாய் சுற்றிவந்து
காப்பாற்றி வைத்ததனால்
கைகூப்பும் எண்டிசையும்!

மேற்குமலைத் தொடர்ச்சியிலே
மிதந்துவரும் காற்றும்,உன்
நாற்காலிச் சக்கரத்தை
நாடிவந்து முத்தமிடும்!

மழைமுகில்உன் எழுதுகோல்
மையில்,மையல் கொண்டதனால்
பொழியும்இளந் தூறல்எனும்
பூத்தூவி உனைவணங்கும்!

வெண்ணிலவின் தலைமையிலே
விண்மீன்கள் கூட்டம்இந்த
மண்மீதுன் நினைவிடத்தில்
மலர்வளையம் வைக்கவரும்!

ஓங்கும்எழிற் பூவனங்கள்
ஒன்றாகி அணிவகுத்துத்
தூங்கும்உன்றன் கல்லறையில்
தோரணமாய் காட்சிதரும்!

முன்விழித்து நீஎழுந்த
பின்,விழிக்கும் சூரியன்உன்
பொன்னடிக்குக் கண்விழித்துத்
தன்வணக்கம் சொல்லவரும்!

நோற்றவத்தால் பிறந்தவனே!
நூலகநூல் அத்தனையும்
ஆற்றாமல் படபடக்கும்!
அறிவுமகன் உன்பிரிவால்!

தோற்றமுண்டு! முடிவில்லை!
துலங்கும்உன்பேர் காலம்வென்று
வீற்றிருக்கும் பெரும்பேறு!
விழாவெடுக்கும் வரலாறு!

கலைவணங்கும்! சிலைவணங்கும்!
"கருவில்வந்த திரு"நின்னை
மலைவணங்கும்! வான்வணங்கும்!
வையகமே உனைவணங்கும்!

உலகமொழி அத்தனையும்
ஒருகுடைக்கீழ் வந்துநின்றே
தலைவணங்கும்! உனதுபுகழ்
தமிழ்போல வாழ்க!என்றே!

வென்றெழுவோம் சோதனையை!
வெறிப்பகையை முறியடிப்போம்!
என்றும்உன்றன் வழிநடப்போம்!
இனஉரிமை மீட்டெடுப்போம்!

ஒன்றுபட்டுத் தோழரெல்லாம்
"உயிர்எமக்குக் கழகம்"என
நின்றெழுவோம்! என்றுனது
நினைவிடத்தில் சூளுரைப்போம்!



கவிச்சுடர்
கவிதைப்பித்தன்